பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper
அன்பளிப்பு

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 28 புதன்கிழமை (10-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 135

# ராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோரி
# இன்று மாபெரும் மனித சங்கிலி போராட்டம்

## சாவகச்சேரியில் இருந்து பருத்தித்துறை வரை

சாவகச்சேரி, ஏப்ரல் 10

ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ள திட்டமிடும் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரி தமிழீழ மக்கள் சாவகச்சேரியில் இருந்து பருத்தித்துறை வரை 15 மைல் தூர சங்கிலித் தொடர் போராட்டத்தையும், மாபெரும் ஊர்வலத்தையும் இன்று நடத்தவிருக்கின்றனர்.

வெகுஜன அமைப்புக்களின் இணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சங்கிலிப் போராட்டம் மாலை 3 மணிகு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஆரம்பமாகும்.

பஸ் நிலையத்திலிருந்து கொடிகாமம் சந்திவரையும்—

அங்கிருந்து வரணி வீதியூடாக பருத்தித்துறை வரையும்—

வீதியின் இருமருங்கிலும் மக்கள் கைகோர்த்து நிற்பார்கள்.

சங்கிலித் தொடருக்கும் நடுவே ஊர்வலம் செல்லும்.

மந்திகையில் அகதிகளுக்காக ஐ. நா. தூதரகத்திலும், பருத்தித்துறையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிலும், பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் உள்ள அரச அதிபர் அலுவலகத்தில் அரச அதிபரிடமும் மகஜர்கள் கையளிக்கப்படுவதோடு ஊர்வலம் முடிவடையும்.

சாவகச்சேரியில் இருந்து பருத்தித்துறை வரை சங்கிலித் தொடராக நிற்கும் மக்கள், தமது போராட்டத்தை ஊர்வலம் பருத்தித்துறை சென்றடையும் வரை தொடர்வர்.

ஊர்வலத்தில் மக்களின் அவலங்களை சித்திரிக்கும் ஊர்திகளும் எடுத்துச் செல்லப்படும்.

சங்கிலிப் போராட்டத்தை யொட்டி இன்று பிற்பகல் வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் நேரத்துடன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ நீதிமன்ற அமர்வுகள்

சாவகச்சேரி, ஏப். 10

இன்று நடைபெறும் மனித சங்கிலிப் போராட்ட ஊர்வலம் காரணமாக சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதேசங்களில் அமைந்துள்ள தமிழீழ மாவட்ட மன்றுகளின் அமர்வுகள் நடைபெற மாட்டா என தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## படகுச்சேவை இன்று நடைபெறாது

சாவகச்சேரி, ஏப். 10

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று நடைபெற மாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தெரிவித்தனர். (இ-3)

## வாழைச்சேனை மோதலில் சிப்பாய் காயம்

கொழும்பு, ஏப். 10

வாழைச்சேனையில் இருந்து 7 மைல் தொலைவில் உள்ள பறங்கியமடு என்றும் இடத்தில் கடந்த ஞாயிறன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மரங்களில் குண்டுகளை பொருத்தி சந்திரிகாவை கொல்லும் முயற்சி அம்பலமாம்!

கொழும்பு, ஏப். 10

அலரிமாளிகைக்குப் பின்புறமாகவுள்ள மரங்களில் குண்டுகளைப் பொருத்தி, ஜனாதிபதி சந்திரிகா வாகனத்தில் செல்லும்போது அதனை வெடிக்க வைத்து அவரைக் கொலை செய்ய மேற்கொண்ட முயற்சி ஒன்று அம்பலமாகியுள்ளதாம்.

அந்த மரத்தில் பொருத்தப்பட்ட குண்டை வெடிக்க வைக்கும் திட்டம் குறித்து தகவல் திரட்ட வந்த ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோதே இத்திட்டம் அம்பலமானதாம்.

இத்திட்டம் பற்றி விவரங்கள் எதனையும் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிட முடியாதுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் | என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-7)

## காவலில் இருந்த ராணுவத்தினர் கடற்படை தளபதியை நோக்கி சூடு

கொழும்பு, ஏப். 10

முன்னறிவித்தல் இன்றி கொழும்பு பாதுகாப்பு வலயம் ஒன்றுக்குள் வாகனத்தில் பிரவேசித்த கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மொஹான் சமரசேகராவின் வாகனத்தை நோக்கி அங்கு காவலில் நின்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச் சம்பவத்தில் வாகனத்தில் இருந்த அவரின் மெய்ப் பாதுகாவலர்கள் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும்—

கடற்படைத் தளபதி காயமின்றி தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வலயத்தில் காவலில் இருந்த இராணுவத்தினர் எச்சரித்த போதும், அதை அசட்டை செய்யாமல் கடற்படைத் தளபதியின் வாகனம் சென்றபோதே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக நேற்றைய மாலை ''ஒப்சேவர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தமது கவலையை கடற்படைத் தளபதி பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவித்ததாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

### புலிகள் என்று நினைத்தனராம்

இதற்கிடையில் முன்னறிவித்தல் இன்றி வாகனம் வந்ததால், அது புலிகளின் வாகனமாக இருக்கலாம் என்று கருதியே ராணுவத்தினர் சுட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3-7-6)

## முன்னாள் ராணுவ தளபதி ஹமில்டன் மீது வழக்கு

கொழும்பு, ஏப். 10

சொத்துக்கள் மற்றும் நிதி தொடர்பான விவரங்களை பிரகடனம் செய்யவில்லை என்று குற்றம் சாட்டி முன்னாள் பாதுகாப்பு அமைச்சு செயலாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மீது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.

தவறான வழியில் சம்பாதித்த நிதி மற்றும் உடமைகளை பிரகடனம் செய்யவில்லை என்று லஞ்ச சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-3-6)

## இரு பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள்

### இன்றும் நாளையும் நடைபெறும்

சாவகச்சேரி, ஏப். 10

யாழ். மருத்துவ பீடத்தின் இறுதிப் பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான குழந்தை மருத்துவம், மருத்துவம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இன்றும், நாளையும் மந்திகை ஆஸ்பத்திரியில் நடைபெறவிருக்கின்றன.

இறுதிப் பரீட்சைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதியின் தலை துண்டித்த கும்பல்!

சென்னை ஏப். 10

சுவரேறி சிறைச்சாலை ஒன்றுக்குள் பலவந்தமாக நுழைந்த கும்பல் ஒன்று, சிறையில் இருந்த கைதி ஒருவரின் தலையை வெட்டி எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை தமிழ்நாடு, நாகர்கோவில் சிறைச்சாலையில் இடம்பெற்றது.

பல கொலைக் குற்றங்களுக்காக சிறைவைக்கப்பட்டிருந்த லிங்கன் என்ற பிரபல கேடியின் தலையே இந்த சம்பவத்தில் துண்டிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தின் போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியை ஏற்படுத்தும் அனுருத்தவின் வாக்குறுதி

### நம்ப தயாரில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, ஏப். 10

''புதுவருடத்துக்கு முன் அமைதியை ஏற்படுத்துவேன் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியது நடக்கவில்லை. அவரின் கூற்றை நாம் நம்பவும் இல்லை''

இப்படிக் கூறினார் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவசரகால நிலை நாடு முழுவதும் அமுல்செய்யப்படுகிறது. ஏன் அவ்வாறு செய்யப்படுகின்றது என்ற விளக்கங்கள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் வடக்கிலும், கிழக்கிலும் மட்டும் என்ற நிலையில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் நாடு முழுவதும் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்கின்றனர் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறினார். (இ-3)

## அரச படைகளின் நடவடிக்கைகள் வடக்கில் விரைவில் அதிகரிக்கப்படும்

### நாடாளுமன்றத்தில் அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

''வடபகுதியில் பயங்கரவாதத்துக்கு எதிராக அரச படைகளின் நடவடிக்கைகள் விரைவில் அதிகரிக்கப்படும்''.

இப்படி பிரதிப் பாதுகப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தை நேற்று நாடாளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக இராணுவ நடவடிக்கை தொடர்பான விவரங்களை வெளியிட முடியாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல்களின் போது வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர். இதைத் தவிர்க்கவே நாடு முழுவதும் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை சமுகமாக நடத்துவதற்காகவே அவசரகால சட்ட விதிகளை நாடு முழுவதும் அரசு பிரகடனம் செய்துள்ளது. அதை பிற்போடுவதற்கல்ல என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

40W சோலார்+120 A.M. பற்றறியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- No 19, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
(41436)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலம் பேசப் பயில (எழுத, வாசிக்கவும் பயிற்சி கொடுக்கப்படும்) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, மே/பா செ. தங்கராசா, பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (சிறு குறாப்பாக மட்டும்)
(41437)

### தவறிவிட்டது

பின்வரும் இலக்கங்களுடைய குடும்ப அட்டைகள் பையுடன் சாவகச்சேரியில் தவறிவிட்டன, 00082010401 00092130528, 00092130320 தயவு கூர்ந்து கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்:- K.S. செல்லத்தம்பி, இல: 13, சந்தை உட்புறம், சாவகச்சேரி.
(41351)

### தேவை

நல்ல நிலையிலுள்ள சக்கர நாற்காலி [WHEEL CHAIR] உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- இல: 106, C/O உதயன் கிளை, பருத்தித்துறை.
(40420)

## எம். கே. எஸ். வைத்தியசாலை

3 ஆம் கட்டை கே. கே. எஸ். வீதியில் இயங்கியது.
தற்பொழுது
யாழ். வீதி, கிளிநொச்சியில்
சிவா வர்த்தக நிலையம் அருகில் இயங்குகிறது.
டாக்டர். மு. கனகசபை.
(40494)

உ
ஓம் சாந்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## யாழ். வண்ணை குளங்கரை மருதடி
## சிறி காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)

# வருடாந்த மகோற்சவம் 1996

அம்பிகை அடியார்களுக்கு,

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் நிகழும் சித்திரை மாதம் **7** ஆம் திகதி (**19 - 04 - 96**) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது. இத்தினத்தை முன்னிட்டு, கொடிகாமம் கச்சாய் வீதியில் அமைந்துள்ள

### மருதடிப் பிள்ளையார் ஆலயத்தில்

அமைந்துள்ள அம்மன் ஆலயத்தில் பூசைக்குரிய ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே விழா உபயகாரர்கள் தாங்கள் விரும்பிய வண்ணம் ஆலய பிரதம குருக்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விழாவினை நிறைவேற்றிக் கொள்ளும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

தொடர்பு:-
பிரம்ம ஸ்ரீ இரா.பாஸ்கரக்குருக்கள்
பிரதமகுரு
[யாழ்/வண்.குளங்கரை மருதடி
சிறி காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்]
சற்குணபேசன் வீதி, கச்சாய் றோட்,
கொடிகாமம்.

இங்ஙனம்
அன்னையின் சேவையில்
தர்மகர்த்தா சபை

குறிப்பு:- கொடிகாமம் சந்தியில் இருந்து கச்சாய் றோட்டில் 500 யார் தூரம்.
(40421)

## புதுவருட மலிவு விற்பனை

பிளவுஸ்பீஸ், முகூர்த்தப்பட்டுப் புடைவைகள், சேட்டிங், சூட்டிங், றெடிமேற் றவுசர் போன்றவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள:

யாழ்.

# சோதி புடைவையகம்

நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.

★ சில்க் பொலிஸ்ரர் / மீற்றர்:- 60 ரூ. மட்டுமே
★ றெனின் / மீற்றர்:- 150 ரூ. ,,
(41357)

## தேடுகிறார்

யாழ்ப்பாணம் இல 86, கோவில் வீதியைச் சேர்ந்த ஜெயராணி செபஸ்ரியாம்பிள்ளை என்பவர் தன்னுடன் இருக்கும் செல்வி கரோலின் பாமினியின் தாய் திருமதி றஞ்சினி யேசுதாசன் என்பவரை உடனடியாகக் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

திரு. எஸ். லியோ எதிர்மனசிங்கி,
மே/பா திருமதி சொர்ணம் கணபதிப்பிள்ளை,
ஆசிரியர் "சிவஸ்தான்",
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

தகவல்:
திருமதி ஜெயராணி செபஸ்ரியாம்பிள்ளை
(41358)

## முக்கிய அறிவித்தல்

அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)

### விசேட பொதுக்கூட்டம் 21-04-96

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 21-04-96 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு கொடிகாமத்திலுள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

பொதுச் சபைப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் தவறாது பங்குபற்றி முறைப்படி கூட்டம் நடைபெற ஒத்துழைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் இம்மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் பெற்றுக் கொள்ளும்படியும், இவ்வறிவித்தலை உபவிதிப்படியான அறிவித்தலாக ஏற்றுக் கொள்ளும்படியும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்,
கொடிகாமம்.
09-04-1996
[41355]

## உள்ளகக் கணக்காய்வாளர்

# தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள உள்ளகக் கணக்காய்வாளர் (INTERNAL AUDITOR) தேவை. முழு விவரங்களுடன் **17 - 04 - 96** க்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 541
C/O உதயன்,
சரசாலை தெற்கு.
(C/4181)

# தேடுகின்றோம்

திருமதி லிங்கவதி நல்லைநாதன் (வயது 51)
கோவிலுக்கு போய் வீடு திரும்பாததால் தேடுகின்றோம். கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு வரும்படி அறிவிக்கவும்.

சி. நல்லைநாதன்,
மே/பா. க. இரத்தினம்,
உண்டுவத்தை,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.
(40422)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின்மடியில் **12-05-1934**
இறைவனடியில் **11-03-1996**

தன்னை, களபூமி, காரைநகர்

அமரர்

## திருமதி விசாலாட்சி சுந்தரம்பிள்ளை
(நடனாச்சி, பாட்டி)

எங்கள் வாழ்வில் வழிகாட்டியாய் அன்பின் இருப்பிடமாய் இருந்து எம்மையெல்லாம், ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நிரந்தர விலாசம்:-
புலவனார் வீதி,
கல்வியங்காடு.

தற்போதைய விலாசம்:-
அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(41441)

உ
சிவமயம்

## இடம் பெயர்ந்த இந்துக் குருமார்
## நலனோம்பு நிதியம்
### நிவாரணம் வழங்கல்
(பகுதி — 4)

காலம்:- **11 - 04 - 96** வியாழன் மாலை 4 மணி
இடம்:- நல்லை ஆதீனம், மீசாலை.

★ தெரிவு செய்யப்பட்ட நாற்பது விண்ணப்பதாரிகளுக்கு ரூபா 1000/- பணமும் பொருள்களும் வழங்கப்படும். தெரிவுக்குரியவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நிதியத்தின் சார்பில்
ஆறு. திருமுருகன்
— செயலாளர்
(சி-4179)

## மாபெரும் மனித சங்கிலிப் பேரணி

அனைத்து தமிழீழ மக்களும், வணிக பெருமக்களும் இன்றைய இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை கண்டித்து இன்று **1996 - 04 - 10** ஆம் திகதி மாலை **3.00** மணிக்கு அணி அணியாக திரண்டு மனிதச் சங்கிலிப் போராட்டம் மூலம் எமது அடிமைச் சங்கிலியை உடைத்து; ஒருமித்த குரலை வெளி உலகிற்கு காட்டி எமது உரிமையை வென்றெடுக்க எல்லோரது ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கும் அதே வேளை வணிக மன்றங்கள், கழகங்கள் வியாபாரத்தை குறிப்பிட்ட நேரம் நிறுத்தி ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம்.

யாழ். மாவட்ட
வணிகர் கழகங்களின் இணையம்
(41353)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியை

திருமதி

## அன்னலட்சுமி யோகேஸ்வரன்

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
([illegible])

## என்றும் நீங்காத நினைவில்...
## 3 ஆம் ஆண்டு
# நினைவலைகள்

தோற்றம்: 16 — 01 — 1919



மறைவு: 13 — 04 — 1993

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் விரிவுரையாளர்

உயர்திரு

## சோமசுந்தரம் வன்னியசிங்கம்
[M. Sc. பொருளியல்]

### திதி: 10 — 04 — 96

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மனைவி, உறவினர்கள்

"வைரவர்-கடாட்சம்"
பலாலி-வீதி,
திருநெல்வேலி-வடக்கு,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:-
'சிவந்தாம் தோட்டம்',
அல்வாய்-கிழக்கு,
அல்வாய்.
(41447)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அடக்கு முறைக்கு அத்திவாரம்

அரசாங்கம் நாடு முழுவதிலும் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளது.

சந்திரிகா பதவிக்கு வந்த போது, சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில், பாணின் விலையைக் குறைத்ததைத் தவிர, வேறு எதனையுமே அவர் இது வரை நிறைவேற்றவில்லை.

ஆனால் அதேவேளை — அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்து, தென்னிலங்கையின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து அவர்களின் நாளாந்தச் சீவியம் திண்டாட்டமாகி உள்ளது.

அத்தோடு அங்கு அரசியல் அடாவடித்தனமும் முகிழ்த்து வருகிறது. ஆனமடுவவில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மீது ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை அதற்கான சமிக்ஞை.

அரசியல் விரோதிகளை தனக்குள்ள அதிகாரப் பலம் கொண்டும், வன்முறைகள் மூலமும் அடித்து வீழ்த்தும் அடக்குமுறை தெற்கில் ஆரம்பமாகி இருக்கிறது.

எதிர்க்கட்சியினரான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களும் அரசியல் வன்முறைகளில் கைதேர்ந்தவர்கள். ஆகையால் அவர்கள் சும்மா பார்த்துக்கொண்டு இருக்கப் போவதில்லை.

எனவே, தெற்கில் அரசியல் கட்சிகளிடையேயான வன்முறைகளும், அரசின் இயலாமைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியும் ஒரே வேளையில் வெடித்துப் பெரும் கலகமும், குழப்பமும் தோன்றும் அபாயம் உள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தினால் அரசின் பலவீனம் வெளிப்படும். அப்கலவரம் வெடிக்கும் சாத்தியமும் நிறையவே உண்டு.

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து, தெற்கில் தன்னைச் சூழவந்து எரிக்கக் கூடிய அரசியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவே சந்திரிகா நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி உள்ளார்.

மக்கள் புரட்சிக்கு எதிராக எய்வதற்காக, அவசரகாலச் சட்டம் என்ற ஆயுதத்தை இப்போதே தீட்டிக் கூராக்கும் சந்திரிகாவின் ஆயத்த ஏற்பாடு இது.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முன்னேற்பாடு இது.

இதனை, வெள்ளம் வருமுன் அணை கட்டும் முயற்சி என்பதற்குப் பதிலாக —

சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கி, பொலீஸ்—இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, சர்வாதிகாரத்தைத் தோற்றுவிப்பதற்கான ஆரம்பம், அத்திவாரம், என்றே கொள்ள வேண்டும்.

அவசரகாலச் சட்டம் என்பது மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், நெருக்கடிகளில் இருந்து நிவாரணம் அளிப்பதற்கும் மாறாக, அவர்களை இராணுவக் காலால் மிதித்து நசுக்கி அரசியல் அடிமைகளாக்கவே பெரிதும் உதவும்.

தனது இயலாமையையும், அரசியல் பலவீனத்தையும் மறைப்பதற்காகவே, சந்திரிகா, அவசர காலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறார் என்பதும் மறந்துவிடுவதற்கில்லை.

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை முதன் மைச்சாலை நெல்லியடியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு, இன்று 10 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ கமலாதேவி கந்தசாமி --மே/பா, K. வீரசிங்கம், துன்னாலை கிழக்கு.

★ பொன்னு சின்னத்துரை — மே/பா, சத்தியா, துன்னாலை வடக்கு.

★ செ செல்வரட்ணம் அல்லது எஸ். மோகனராஜ் — நாகலிங்கம் முதலியார் தெரு, பருத்தித்துறை.

★ சின்னக்குட்டி கந்தசாமி பொன்னுத்துரை — மே/பா, சச்சிதானந்தம் தயா, இமையாணன் கிழக்கு

★ காங்கேஸ்வரி தனபாலசிங்கம் — கிராம சேவை ஒழுங்கை, புலோலி தெற்கு.

★ தம்பையா சிவராஜா—மே/பா, யதாவானந்தம், வி. எம். வீதி, பருத்தித்துறை.

★ மகேஸ்வரி முருகேசு — மே/பா, S. இராசநாயகம், ஆனந்தவாசா, நெல்லியடி.

★ பயில்வாகனம் மகாலிங்கம் அல்லது தவமணி மகாலிங்கம் -- மே/பா, ஆறுமுகநாயகம், புலோலி தெற்கு.

★ பொன்னம்மா சின்னையா — 'முருகபவனம்', இமையாணன் கிழக்கு.

★ பெனடிக்ட் துரைசிங்கம் செபமாலை — 3 ம் குறுக்குத்தெரு. பருத்தித்துறை.

★ தவமணிதேவி ராஜேந்திரன் — மே/பா தேவசகாயம், பிரதான வீதி, வறாத்துப்பளை.

★ கிட்னர் செந்துவேல் — கரணவாய் வடக்கு.

★ சிவபாக்கியம் சற்குணநாதன் — மந்திகை வைத்தியசாலை.

★ இராஜதுரை கனகலிங்கம் — குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை.

★ விஜயா சந்திரா — மே/பா வினாசித்தம்பி, "விஜயஉதயம்" புற்றளை.

★ றோகினி பரமலிங்கம் — பிரதான வீதி, நெல்லியடிச்சந்தி.

★ கனகசபை கந்தையா—மே/பா K. S குலசிங்கம் மாஸ்ரர், கந்தஉடையார் ஒழுங்கை, புலோலி மேற்கு.

★ வேலுப்பிள்ளை சந்திரகுமார் — சிங்கைநகர், புலோலி தெற்கு.

★ கதிரவேலு செல்லத்துரை — துரையான் தோட்டம், நெல்லியடி.

★ கலா வெள்ளையப்பா — மூப்பியா வளவு, விக்கினேஸ்வரா கல்லூரி றோட், கரவெட்டி.

★ செல்லக்கண்டு ஜெயந்திரராசா — மண்டான், கரணவாய் மேற்கு. (இ)

## காணாமற் போனவர்கள் விவரம் இப்போது பதியலாம்

கிளிநொச்சி, ஏப். 10

காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்கள் ஒரு வருடமாகக் கிடைக்கப்பெறாத பட்சத்தில் —

அவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்வதற்கான கால அவகாசம் டிசம்பர் மாதம் 30ஆம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒரு வருடத்திற்கு மேலாக சுமார் 88 பேர் காணாமற்போயுள்ளார்களென உத்தேசமாக அறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போனவர்கள் இறந்தவர்களாகக் கருதப்பட்டு பதிவுகளை மேற்கொள்வதற்கான இறுதித் திகதி இவ்வருடம் டிசம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைவதால் —

காணாமற்போனவர்களின் உறவினர்கள் இது தொடர்பாக பதிவுகளை உடன் மேற்கொள்வது வேண்டாத தாமதங்களைத் தவிர்க்கும் — என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. க. ஞா. அல்ப்போன்ஸ் தெரிவித்தார். (அ-124)

## நோய்கண்ட மாட்டை இறைச்சிக்கு அறுத்தாராம்

### கடைக்கு சீல் வைப்பு

தென்மராட்சி, ஏப். 10

நோய் காரணமாக சுகாதாரப் பரிசோதகரால் வெட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட மாடு ஒன்று வேறொரு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு களவாக வெட்டப்பட்ட சம்பவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களவாக வெட்டப்பட்ட நோயுற்ற மாட்டின் இறைச்சி விற்கப்பட்ட கடையின் தற்காலிக உத்தரவுப் பத்திரம் சாவகச்சேரி நகரசபையால் நிறுத்தப்பட்டு, கடையும் சீல் வைக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

கடந்த வியாழக்கிழமை மயிலை நிறமுடைய மாடு ஒன்று இறைச்சிக்கு அறுப்பதற்காக கொல்களத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பரிசோதனையின்போது குறிப்பிட்ட மாட்டில் நோய் காணப்பட்டதால் அறுப்பதற்கு அது அனுமதிக்கப்படவில்லை.

நோய்வாய்ப்பட்டிருந்த அந்த மாடு உழவு இயந்திரம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு கச்சாய் கடற்கரைப் பகுதியில் வைத்து வெட்டப்பட்டதாக பின்னர் தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து மீசாலை சுகாதாரப் பரிசோதகர் சம்பந்தப்பட்ட மாட்டின் உரிமையாளரின் கடையை பரிசோதித்தார்.

அப்போது ஏற்கனவே அனுமதித்து வெட்டப்பட்ட மாட்டிறைச்சியுடன், நோய் காரணமாக வெட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்த மாட்டின் இறைச்சியும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இதனை அடுத்தே தற்காலிக உத்தரவுப் பத்திரம் நிறுத்தப்பட்டு கடையும் சீல் வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி ஆஸ்பத்திரியில

## சத்திரசிகிச்சைக்கான உபகரணம் தட்டுப்பாடு

சத்திரசிகிச்சை உபகரணங்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டி இருப்பதாக மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் கே. எஸ். சிவகுரு தெரிவித்தார்:

இதனால் இந்த வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்றும் அவர் கூறினார். (இ-124)

### மாணவர் குடும்ப நல சேவை பயிற்சி

## 68 பேரின் விண்ணப்பங்கள் அமைச்சால் நிராகரிப்பு

யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த வருடம் மாணவ குடும்ப நல சேவையாளர் பயிற்சிக்கு விண்ணப்பித்தோரில், தகைமை குறைந்த 68 பேரின் விண்ணப்பங்கள் வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்களால் பயிற்சிக் கட்டணமாக அனுப்பப்பட்ட 100 ரூபாவுக்கான காசுக் கட்டளைகள் யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்கள் சாவகச்சேரியில் உள்ள சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன என்றும்—

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் உடனடியாக தத்தமது காசுக்கட்டளைகளை பெற்றுக் கொள்ளுமாறும்— சுகாதார சேவைகள் மகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் க. மகேந்திரன் அறிவித்துள்ளார். (இ-117)

## ஹபரணவில் தபால் பொதி

நாளை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் ஹபரண கப்பலில் தாபால் பொதிகளும் எடுத்துவரப்படும் என தாம் நம்புவதாக தபாலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புதுவருடக் கருமம்

தாது என்னும் புதிய ஆண்டு எதிர்வரும் சனிக்கிழமை (13-04-1996) மலர்கிறது. அறுபது வருட வட்டத்தில் இது பத்தாவதாகும்.

வாக்கிய பஞ்சாங்கப்படி பிற்பகல் 2 மணி 25 நிமிடத்திற்கும் —

திருக்கணித பஞ்சாங்கப்படி மாலை 4 மணி 51 நிமிடத்திற்கும் —

புதிய ஆண்டு பிறக்கிறது.

வாசகர்களின்நலன் கருதி புதுவருடக் கருமங்கள் மற்றும் கைவிசேடம் சம்பந்தமாக வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களில் தெரிவிக்கப்பட்ட விவரங்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

### வாக்கியம்

*விஷு புண்ணிய காலம்*

சனிக்கிழமை முற்பகல் 10-25 மணிமுதல் மாலை 6-25 மணிவரையும் விஷு புண்ணிய காலம்.

இக்காலத்தில் மருத்து நீர் தேய்த்து சிரசில் புன்கிலையும் காலில் ஆலிலையும் வைத்து நீராடி கறுப்பு புகை நிறமுள்ள பட்டாடையாகினும், இளநிறக் கரையமைந்த புதிய ஆடையாகிலும் தரித்து மாணிக்கம் நீலம் இழைத்த ஆபரணம் அணியவேண்டும்.

*கைவிஷேடம்*

சனிக்கிழமை இரவு 6-21 மணி முதல் 8-13 மணி வரையும் இரவு 8-25 மணி முதல் 9-01 மணி வரையும்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7-55 மணி முதல் 9-44 மணி வரையும், முற்பகல் 9-59 மணி முதல் 11-58 மணி வரையும் கைவிசேடம் வழங்கலாம்.

திங்கட்கிழமை இரவு 9-24 மணி முதல் 10-15 மணி வரையும்கைவிசேடம் வழங்குவதற்கான சுபநேரமாகும்.

*பலன்*

யுத்தத்தினால் அழிவு. பொருளாதாரப்பாதிப்பு. வெளிநாடுகளுடன் நல்லுறவு. நெல் சோளம் தேயிலை தென்னை ஆகியவை நல்ல விளைச்சல், பின்மழை, காற்றுக் குழப்பம், கால்நடை விருத்தி, பூச்சி புழுக்களால் பயிரழிவு. கல்வித்தரம் குறைவு. தொற்று நோய்க் கஷ்டம்.

### திருக்கணிதம்

*விஷு புண்ணிய காலம்*

சனிக்கிழமை நண்பகல் 12-51 மணி முதல் இரவு 8-51 மணி வரை விஷு புண்ணிய காலமாகும். இக் காலத்தில் மருத்துநீர் தேய்த்து தலையில் ஆலிலையும் காலில் இலவமிலையும் வைத்து நீராடி நீல நிறமுள்ள பட்டாயினும் நீலநிறக் கரைவைத்த வெள்ளைப் புது ஆடையாயினும்தரித்து இந்திர நீலம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களை அணிய வேண்டும்.

*கை விசேடம்*

சனிக்கிழமை இரவு 8-28 மணிமுதல் 10-04 மணி வரையும், இரவு 10-28 மணி முதல் 11 - 40 மணி வரையும் கைவிசேடம் வழங்கலாம்.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-04 மணிமுதல் 11-06 மணி வரையும் கைவிசேடத்துக்கான சுபநேரம் உண்டு.

*பலன்*

அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள். வரும் அரசாங்கம் நினைத்தபடி செயற்பட முடியாத நிலை உருவாகும். பொருளாதார வளர்ச்சி, போக்குவரத்துக் கஷ்டங்கள் உண்டு குழந்தைகளுக்குப் புதுவித நோய் பரவும். நெற்பயிர் சிறு தானியங்கள் உட்பட விவசாய வளர்ச்சி உண்டு. ★

# ஊரடங்குச் செய்தி தொடர்பாக நான்கு செய்தியாளர்கள் கைது!

## வானொலிச் சேவையும் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 10

நாடு முழுவதும் அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக வெளியிடப்பட்ட அறிவிப்பை, தவறுதலாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்த 'சியரச' தனியார் வானொலிச் சேவை செய்தியாளர்கள் நால்வர் ரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் இருவர் நேற்று முன்தினம் இரவு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றைய இருவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தவறான செய்தியை வெளியிட்டதுக்கான இந்த வானொலிச் சேவை அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு குறித்த தவறான செய்தியால் கொழும்பில் பெரும் பதற்றம் ஏற்பட்டது தெரிந்ததே.

தவறான செய்தியை அறிவித்ததுக்காக உடனடியாக மன்னிப்புக் கோரப்பட்டதாகவும்—

பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை திருத்தம் வாசிக்கப்பட்டதாகவும்—

அப்படி இருந்தும் அரச பிரஸ்தாப வானொலிச் சேவை மீது கடும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் — பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-6)

### அரசில் அங்கம் வகிக்கும்

## சம சமாஜக் கட்சி வாக்களிக்கவில்லை

அவசரகால சட்டத்தை ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை வாக்களிப்பில் அரசில் அங்கம் வசிக்கும் சம சமாஜக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சமசமாஜக் கட்சி எம்.பிக்களான வாசுதேவ நாணயக்கார, பட்டி வீரக்கோன் ஆகியோர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

''சமசமாஜக் கட்சி அவசர காலச் சட்ட பிரேரணை வாக்களிப்பில் கலந்து கொள்ளாதது அரசுக்கு கூடாத அறிகுறியாகும்'' என்று ஏ. எவ். பி. செய்தியாளர் அவல் ஜெயசிங்க தெரிவித்தார். (இ-3-6)

## புலிகளை ஆதரிக்கவில்லை என்கிறார் கருணாநிதி

சென்னை, ஏப். 10

'விடுதலைப் புலிகளை ஒரு போதும் தாம் ஆதரிக்கவில்லை' என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி நேற்று பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இலங்கை வாழ் சிறுபான்மை தமிழ் மக்களின் அதிகார பூர்வமான உரிமைகளுக்கு தாம் ஆதரவு வழங்கியதாகவும் —

அந்த உரிமைகளுக்காக போராடும் அனைத்து தமிழ் குழுக்களும் ஒன்றுடன் ஒன்று ஐக்கியமாக இருக்க வேண்டும் என்று விரும்பியதாகவும் — அவர் கூறினார். (இ-3)

## வடக்கு மீதான தாக்குதல் ராவுக்குப் பாதகம்?

கொழும்பு, ஏப். 10

வடக்கில் உக்கிரமான தாக்குதலில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இலங்கை அரசைக் கேட்கக் கூடும்.

மேற்கண்டவாறு கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

தமிழ் நாட்டில் தேர்தல் நடக்கும் காலத்தில் —

வடக்கில் தாக்குதல் நடக்கும் பட்சத்தில் — தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்பை தி. மு. க பிரசாரத்துக்கு பயன்படுத்தும் என்றும் அதன் காரணமாக நரசிம்மராவுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு கோரிக்கை விடப்படுமானால் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் மட்டுமே படையினர் ஈடுபடலாம் என்று கருதப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

---

இரு பாடங்களுக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை நடத்தும் பரீட்சகர்கள் கொழும்பில் இருந்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததால் இந்தப் பரீட்சைகள் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

குழந்தை வைத்திய நிபுணரான திருமதி வி. கருணாகரன் குழந்தை வைத்தியம், வைத்தியம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை இன்றும், நாளையும் நடத்துவார்.

ஏனைய வைத்திய நிபுணர்கள் வந்த பின் ஏனைய செய்முறைப் பரீட்சைகளும் நடைபெறும்.

செய்முறைப் பரீட்சைகள் முடிவடைந்த பின்னரே பரீட்சை முடிவுகள் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''பரீட்சை முடிவுகள் வெளிவந்த பின்னரே மருத்துவர்களுக்கான தகுதிகாண் நியமனம் வழங்கப்படவேண்டும்'' என்று யாழ். மருத்துவ பீட மாணவர்கள் தொடர்ந்த வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது தெரிந்ததே. (இ-3-8)

---

## ஒய்வூதிய வவுச்சர்கள்

ஒய்வூதியர்களது மார்ச் மாதத்துக்கான வவுச்சர்கள் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படும் ஹபரண கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இதுவரை வழங்கப்படாதிருந்த நிலுவைகளும் இந்த ஒய்வூதிய வவுச்சர்களுடன் எடுத்து வரப்படலாம் என்வும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்க் கட்சிகள் வாக்களிப்பு

அவசர காலச் சட்டத்தை ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 36 வாக்குகளால் நிறைவேறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் அரசுடன் சேர்ந்து வாக்களித்தன. ஐ. தே. க எதிர்த்து வாக்களித்தது.

### அரச நிவாரணத்துடனான

## லொறிகள் கிளிநொச்சிவர புளொட் அனுமதிக்குமாம்

கிளிநொச்சி, ஏப். 10

புளொட் குழுவினரால் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள உணவு லொறிகளை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வவுனியாவிலிருந்து தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென நிவாரணப் பொருள்களை எடுத்து வடும் லொறிகளே அனுமதிக்கப்படுகின்றன. இப் பொருள்களை எடுத்து வரும் லொறிகளில் 'சி. ஜி. ஈ, எஸ்' என்ற குறியீடு பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த லொறிகளே உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்படும்.

இப்படி அவர் கூறினார்.

நீண்ட நாள்களாக வவுனியாவில் தேங்கிக் கிடக்கும் ஒரு லட்சம் கிடுகுகள் எடுத்து வரப்படும் மென்றும் —

இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு செயலக ஊழியர் ஒருவர் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

---

கைதியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

5 சிறைக்கைதிகளும் சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் இந்த கும்பலின் அரிவாள் வெட்டுக்கு இலக்கானார்கள். இவர்களில் ஒருவர் பின்னர் இறந்து விட்டார். (இ-8)

---

ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்படும்.

நெல்லியடி மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளிலும் சங்கிலிப்போராட்டம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

(இ-3-8-15-30-31-173)

---

வாழைச்சேனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-6)


# மகாநதியின்

## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

பார்த்தால் வாங்குவீர்கள் : வாங்கினால் திருப்தியடைவீர்கள்

சுப முகூர்த்தங்களுக்கேற்ப
★ பட்டுப் புடைவைகள் ★ பட்டு வேட்டிகள் ★ மைசூர் சில்க்
★ காஷ்மீர் சில்க் ★ யோஜெட் சாறி வகைகள்

ஆடவர் மெருகிற்கு மெருகூட்டும்
★ விதவிமான டிசைன்களில் T சேட் ★ செக்சேட் வகைகள்
★ ரவுசர் துணிகள்

கன்னியர் கண்கவர்
★ ஸ்கேட் அன் பிளவுஸ் ★ கவுண் ★ பஞ்சாபி வகைகள்

சின்னஞ்சிறு கண்மணிகளுக்கு
★ வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட T சேட் ★ சூட்
★ றெடிமேட் கவுண் ★ ஸ்கேட் பிளவுஸ் வகைகள்

அனைத்திற்கும்

## மகாநதி புடைவை அகம்

இல. 04, சிறப்பு அங்காடி, சாவகச்சேரி.

(சு-4102)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சோமசுந்தரம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

மயிலணி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சரசாலை வடக்கில் வசித்தவருமாகிய பொன்னம்பலம் சோமசுந்தரம் நேற்று (09-04-1996) காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அமிர்தாம்பிகை, ஜெகதாம்பிகை, பாலசுந்தரம் (ஜேர்மனி), லலிதாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலசுப்பிரமணியம் (முகாமையாளர் - அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்), குணராதசிங்கம் (பிரான்ஸ்), வாசுகி (ஜேர்மனி), நடேசர் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தன், வாகீசன், நிர்மலன், தாரிணி, ராகுலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-04-96) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அமரர் நமசிவாயம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சரசாலை ஆலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
திரு. சி. நடேசர்
திரு. கா. பாலசுப்பிரமணியம்
(மருமக்கள்)

தற்போதைய முகவரி:
தெய்வங்கேணி வீதி,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(41501)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 10-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org